Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி இலக்கம் 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஐப்பசி 12 ஆம் நாள் ஜ. ஆகிர் பிறை 21 (28-10-64) புதன்கிழமை இதழ் 259




பிரதமர்கள் பேச்சுவார்த்தை:

# முட்டுக்கட்டைகளைச் சமாளிக்க முயற்சி

## இலங்கையிலும் பேச்சுக்கள் நடைபெறலாம்

### பிரதமர் ஸ்ரீமா வருகை பின்போடப்பட்டது

புதுடில்லி, அக் 27

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் பிரச்னை சம்பந்தமாக இருநாட்டு பிரதமர்களுக்குமிடையே இங்கு நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் திருப்தியளிக்கக்கூடிய வகையில் முன்னேற்றம் கண்டிருக்கின்றன சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்றுவரும் இந்தப் பேச்சுக்களில் இன்று புதியதோர் திருப்பம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, நாளை தாயகம் திரும்ப விருந்த இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தமது பயணத்தை ஒத்திவைத்துள்ளார். அநேகமாக அவர் வியாழக் கிழமை மாலை கொழும்பு வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகிறது

இலங்கையில் வசிக்கும் "நாடற்றவர்கள்" என்று கருதப்படுபவர்களில் எவ்வளவு தொகையினரை இந்தியா ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற விஷயத்தில், இரு நாட்டுப் பிரதமர்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை சரிப்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இந்த முயற்சிகள் ஓரளவு வெற்றியளிக்கும் என்று மகாநாட்டு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இன்று காலை இலங்கை-இந்திய பிரதமர்களுக்கிடையே ஒரு மணி நேரம்வரை பேச்சுக்கள் நடைபெற்றன. பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்று இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனை சந்தித்தார்.

#### சில கஷ்டங்கள் தோன்றி மறைந்தன

இன்று காலை நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் மிகவும் சாதகமான சூழ்நிலையில் இடம் பெற்றன. இலங்கை-இந்தியர் பிரச்னையை சமரசமாகத் தீர்த்துக்கொள்வதில் ஒரு கட்டத்தில் எதிர்பாராத வகையில் சில கஷ்டங்கள் ஏற்பட்டன என்றும் ஆனால் பின்னர் அவை ஓரளவாக சமாளிக்கப்பட்டுவிட்டன என்றும் மகாநாட்டு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளியினர் பிரச்னையை சுமுகமாகத் தீர்ப்பதில் இரு நாட்டுப் பிரதமர்களும் தீவிர ஆவல் கொண்டிருப்பதாக பார்வையாளர்கள் கருத்து வெளியிட்டனர். பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக முடிக்கவே இலங்கைப் பிரதமர் தமது தாயகப் பயணத்தை தாமதப் படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

#### புள்ளிவிபரம்

இலங்கையில் 9,71,000 இந்திய வம்சாவளியினர் இருக்கின்றனர் என்றும் இவர்களில் 250,000 பேர் இலங்கைப் பிரஜைகளாக பதிவுசெய்துகொள்ளப் படுவார்கள் என்றும் இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது. இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரில் 800,000 பேரை 20 வருடங்களில் இந்தியா ஏற்றுக்கொள்ளும் என்று இந்தியா தெரிவித்துள்ளது. ஆனால் இலங்கைப் பிரஜைகளாக பதியப்படுபவர்களில் 144,000 பேர் ஏற்கனவே இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றுள்ளனர் என்றும் இன்னும் 106,000 பேர் இலங்கைப் பிரஜாவுரிமை பெறுவர் என்றும் இலங்கை தெரிவித்துள்ளதாக நம்பப்படுகிறது.

## வித்துவான்கள், பண்டிதர்மார் அனுபவித்துவரும் கஷ்டங்கள்

### தமிழரசு தூதுகோஷ்டி மந்திரியிடம் கூறும்

கொழும்பு, புதன்

தமிழ் பாடசாலைகளில் கல்வி போதிக்கும் வித்துவான்களும் பண்டிதர்மார்களும் அனுபவித்துவரும் கஷ்டங்களை கல்விமந்திரிக்கு எடுத்துக் கூறும்பொருட்டு திரு எஸ். ஜே. வி. தலைமையில் 8 தமிழரசுக்கட்சி அங்கத்தவர்களைக் கொண்ட தூதுகோஷ்டியொன்று மந்திரியைச் சந்திக்கவிருக்கிறது.

சிங்கள பாடசாலைகளில் பயிற்றுவிக்கும் இதே அளவு தராதரத்திலமைந்த ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் தமக்கு வழங்கப்படாது தாம் புறக்கணிக்கப்படுவதாக மேற்படி. தமிழ் ஆசிரியர்கள் குறைகொண்டிருக்கிறார்கள்.

அதிக நேர சேவை செய்யும் பட்சத்தில் தமக்கு பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கும் சம்பளம் வழங்குமாறும் இவர்கள் மந்திரியைக் கோரவிருக்கிறார்கள்.

### இவர்களுக்கு கட்டாய ஓய்வு இல்லை?

கொழும்பு, புதன்

தொழில் நுட்ப உத்தியோகஸ்தர்கள் சிங்களம் படிக்க வேண்டுமென கட்டாயப்படுத்தப்படக்கூடாது என கேற்றுகூடிய உத்தியோகமொழி உபயோகம் பற்றி ஆலோசனை செய்ய நியமிக்கப்பட்ட மந்திரி சபை உபகமிட்டி தீர்மானித்துள்ளதாக அறியப்படுகிறது

நிர்வாக சேவையில் சேர விரும்பும் தொழில் நுட்ப உத்தியோகஸ்தர்கள் சிங்களம் கற்குமாறு கோரப்படவேண்டுமென மந்திரி சபை உபகமிட்டி தீர்மானித்ததாகவும் தெரிய வருகிறது.

### கூப்பனுக்கு துணி

#### தமிழரசுக்கட்சி முயற்சி

கொழும்பு, புதன்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு தமிழ் மக்களுக்கு கூப்பனுக்கு துணி வழங்குமாறு கோருமுகமாக தமிழரசுக் கட்சி பொதுக் காரியதரிசி திரு. அமிர்தலிங்கமும் வேறு சில அங்கத்தவர்களும் உதவி வர்த்தக மந்திரியை இன்று சந்திக்கவிருக்கின்றனர்.

இவ்விதம் செய்யாது போனால், பல தமிழ் குடும்பங்கள் கள்ளச் சந்தையில் அதிக விலை கொடுத்து துணி வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமென திரு. அமிர்தலிங்கம் 'ஈழநாடு' நிருபருக்கு தெரிவித்தார்.

### கைத்தொழில் மந்திரி யாழ்ப்பாணம் வருகிறார்

மாவிட்டபுரம், புதன்

கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா இந்த வார இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்யவிருக்கிறார்.

மந்திரி தமது யாழ்ப்பாண விஜயத்தின்போது காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்கும் சென்று அங்கு 4 1/2 கோடி செலவில் நடைபெறும் அபிவிருத்தி வேலைகளையும் மற்ற வேலைகளையும் பார்வையிடுவார், பரந்தன் ரசாயனத் தொழிற்சாலைக்கும் மந்திரி சென்று பார்வையிடவிருக்கிறார்.

### தேயிலைத் தொழிலில் அபிவிருத்தி

புதுடில்லி, அக். 27

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே தேயிலைத் தொழிலில் அபிவிருத்தி ஏற்படுத்தும் பொருட்டு, தேயிலை கூட்டு கமிஷன் நிறுவுவதென்று இரு நாட்டு மந்திரிகளும் இன்று தீர்மானித்துள்ளனர்.

உ

தொலை பேசி எண்: 7107 தந்தி: GEE PEE TEE

அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!!

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இறக்குமதி செய்யப்பெற்ற

பலவகையான புதிய ஜவுளித் தினிசுகளும் ஆகக் குறைந்த விலையில் சிறந்த பொருளாக வாங்கக்கூடிய இடம்

யாழ்ப்பாணம்

ஞானபண்டிதன்

ஜவுளிக்கடை

ஒன்றேதான்

(கதிரேசன் கோவிலுக்கு முன்பாக உள்ளது)

சமுகங்கொடுங்கள்.

228. கே. கே. எஸ். ரோட், — யாழ்ப்பாணம்.




சைலால்

முகபபரு. சொறிசிரங்கு கரப்பான், கக்கூஸ்பத்து, வெட்டுக்காயம். வேனல் கட்டி, தீப்பட்டபுண். சேத்துப்புண். பித்தவெடிப்பு முதலிய சரும வியாதிகளைக் குணப்படுத்துகிறது. துணிகளில கறைபிடிக்காது

தயாரிப்பவர்கள் "ராதா புறடக்ஸ்"

விநியோகஸ்தர்:— எஸ். சுப்பிரமணியம் அன் கோ

போன்: 541, 58, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு.

### மணிவாக்கு

தன்னம்பிக்கை மிகவும் அவசியம். தன்னம்பிக்கை உள்ளவரே பெருமையும் வலிமையும் எய்தியுள்ளனர் என்பது எந்நாட்டுச் சரித்திரமும் என்றைக்கும் போதிக்கும் உண்மையாகும்.

— விவேகானந்தர்


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams: EELA NADU Jaffna
Phone: 389

[illegible] குரோதி ஆண்டு
ஐப்பசி மீ 12 உ (28-10-64)


## மீண்டும் கட்டாய ஓய்வு

கட்டாய ஓய்வு சம்பந்தமாக அரசாங்கத்தின் கொள்கை என்ன? இதை மீண்டும் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் இப்பொழுது தோன்றியுள்ளது.

சிங்களத்தில் தேர்ச்சி பெறவில்லையென்ற காரணத்துக்காக அரசாங்க சேவையிலிருந்து கட்டாயமாக ஓய்வு பெறச் செய்வதற்கான உத்தரவுகள் அரசாங்க ஊழியர்பலருக்கு இவ்வருட ஆரம்பத்திலிருந்து வழங்கப்பட்டு வந்தன. மூன்றுமாத முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட இந்த ஊழியரில் ஒரிருவர், பல வருடங்கள் விசுவாசமாக உழைத்ததற்குப் பிரதியுபகாரமாக கட்டாயமாக ஓய்வு பெற்றனர். இந்த உத்தரவுகள் கிடைக்கப்பெற்ற மற்றும் பலர் பிரதமருக்கும் மந்திரிகளுக்கும் தங்கள் நிலையை எடுத்துக் கூறிய பின்னர் நீதிமன்றத்தை நாடவும் முயற்சி செய்தனர். இந்நிலையில்தான், அவர்களது கோரிக்கையைப் பரிசீலனை செய்த அரசாங்க சேவைக் கமிஷன், கட்டாயஓய்வு உத்தரவுகளை நிறுத்தி வைப்பதென முடிவு செய்துள்ளதாக நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா பார்லிமெண்டில் தெரிவித்தார். கோடீஸ்வரன் வழக்கில் கொழும்பு மாவட்ட நீதிபதி அளித்த தீர்ப்பும் மொழி காரணமாக சேவையிலிருந்து கட்டாயமாக ஓய்வு பெற வேண்டுமென உத்தரவிடுவது இப்பொழுதுள்ள சட்டத்துக்கு ஏற்றதல்லவென்று அட்டர்னி ஜெனரல் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தும் தான் அரசாங்க சேவைக் கமிஷனின் அந்த முடிவுக்குக் காரணம் என்று டாக்டர் என். எம். பெரேரா அப்பொழுது தெரிவித்தார்.

இத்துடன் கட்டாய ஓய்வு உத்தரவு நிறுத்தப்பட்டுவிடுமென்று பலரும் எதிர்பார்த்தனர். சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையில் உத்தியோக மொழிச்சட்டமும் நியாயமான அளவு தமிழ் உபயோகச்சட்டமும் அமுல் நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமென்று கூட்டுஅரசாங்கத்தின் முதலாவது சிம்மாசனப்பிரசங்கம் தெரிவித்தது பலருக்கும் ஆறுதலளித்தது. மொழிப் பிரச்னைக்கு ஒரு சுமுகமான, நிரந்தரமான தீர்வுகாணகூட்டுஅரசாங்கம் விசுவாசத்துடன் முயற்சி செய்யுமென்றும் அதுவரை தமிழ்பேசும் அரசாங்க ஊழியரைப்பாதிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட மாட்டாதென்றும்பலரும்நம்பினர்.

ஆனால் சென்றவாரம், குடிசனமதிப்பு, புள்ளிவிவர இலாகாவைச் சேர்ந்த இரு அரசாங்க ஊழியருக்குத் திடீரென்று கட்டாயஓய்வு வழங்கப்பட்டதாகக் கிடைத்த செய்தி, அரசாங்க சேவைக் கமிஷனின் முடிவிலும், நிதி மந்திரியின் விளக்கத்திலும் சிம்மாசனப் பிரசங்கத்திலும், தமிழ்ப்பேசும் மக்களும் அரசாங்க ஊழியர்களும் வைத்திருந்த நம்பிக்கையை நாசமாக்கிவிட்டது. அரசாங்க சேவைக் கமிஷன் தனது தீர்மானத்தை மாற்றிக் கொண்டு விட்டதா? அல்லது அரசாங்கசேவைக் கமிஷனைப் பற்றியோ, அட்டர்னி ஜெனரலின் ஆலோசனையைப்பற்றியோ கவலைப்படாமல் தொடர்ந்து 'கட்டாய' ஓய்வு உத்தரவுகளை அமுல் நடத்துவதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளதா?

குமாஸ்தா சேவை தர உயர்வுத்தெரிவுகள் சமீபத்தில் வெளிவந்தபோது அதில் பாரபட்சம் காட்டப்படாததைக் கண்டு பலரும் மகிழ்ச்சியடைந்தனர். பதவி உயர்வுகளில் பாரபட்சம் காட்டுவதில்லையென்று நற்பெயர் பெறுவதற்காக அவ்விதம் செய்துவிட்டு 'கட்டாய ஓய்வு' என்ற பெயரில் பதவியிலிருந்தே அகற்றிவிடுவது அரசாங்கத்தின் நோக்கமாவென ஐயுறவுகொள்ளவேண்டியுள்ளது. இலாகாத் தலைவர்கள் தம் எண்ணப்படி கட்டாய ஓய்வு உத்தரவுகளை வழங்குகிறார்கள் என்று கருதுவதற்கும் இடமில்லை. எதுவாகிலும் மொழிப்பிரச்னைக்கு சுமுகமான தீர்வுகாண்போம் என்று சொல்லிக் காலத்தைக் கடத்திக்கொண்டு அதே சமயம் தமிழ்ப்பேசும் மக்களுக்குப் பல வழிகளிலும் துன்பம் இழைப்பது நாட்டுக்கு நல்லதல்ல; அரசாங்கத்துக்கும் பெருமையல்ல. கட்டாய ஓய்வு உத்தரவு சம்பந்தமாக ஜூலை மாதத்தில் பார்லிமெண்டில் தெரிவித்த நிதிமந்திரி டாக்டர் பெரேரா மீண்டும் விளக்கம் தெரிவிக்கவேண்டும். அதுவே முறை.

## வட்டுக்கோட்டையில் தமிழரசுக்கிளை

சுழிபுரம், செவ்வாய்

வட்டுக்கோட்டைத் தொகுதியில் தமிழரசுக்கட்சியின் புதிய கிளை ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

உத்தியோகத்தர்களாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. மூ. வன்னியசிங்கம், செயலாளர்: திரு. வி. நடராசா, பொருளாளர்: திரு. செ. இலகுப்பிள்ளை. 13 பேர் கொண்ட நிர்வாகஸ்தர் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## 40,000 பேருக்கு வேலை வாய்ப்பு

கொழும்பு, செவ்வாய்

நடப்பு வருடத்தில் 40,000 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்குமென அரசாங்கம் தெரிவித்துள்ளது. விவசாய, கைத்தொழில், சமூகசேவை பகுதிகளில் இவ் வேலை வாய்ப்புகள் உண்டெனக் கூறப்பட்டது.

# அரசாங்க இலாகாக்களில் தேங்கியிருக்கும் சாதனங்கள்

## ஆயிரக்கணக்கில் பெறுமதி என ஆடிட்டர் ஜெனரல் அறிக்கை

கொழும்பு, செவ்வாய்

அனேக அரசாங்க இலாகாக்களில் விலை உயர்ந்த சாதனங்கள் தேங்கிக்கிடக்கின்றன என்று ஆடிட்டர் ஜெனரல் திரு. பெர்னுண்டோவின் 1962—63-ம் ஆண்டு அறிக்கை கூறுகிறது.

நீர்ப்பாசன, மின்சார, கல்வி, சுகாதார மராமத்து, வன, துறைமுகக்கமிஷன், கடற்படை இலாகாக்களில் பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெறுமான இவ்வித சாதனங்கள் உபயோகிக்கப்படாமல் சோம்பிக்கிடக்கின்றன.

நீர்ப்பாசன இலாகாவில் லொறிகள், ஜீப்கள், வேன்கள், டிரக்டர்கள் ஆகியவற்றில் 187 பழுதுபார்ப்பதற்காக முடக்கப்பட்டிருக்கின்றன.

# ஆஸ்பத்திரி தொழிலாளர் குறைபாடுகள் பல நிவர்த்தி

## மகாநாட்டில் சமரசம்

யாழ்ப்பாணம், செவ்.

வட இலங்கை இணுவில் மக்கிலியோட் ஆஸ்பத்திரியிலும், மானிப்பாய் ஆஸ்பத்திரியிலும் அநேக நாட்களாக முதலாளிமாருக்கும், தொழிலாளிமாருக்கும் இருந்து வந்த பிரச்சனைகளை முன்னிட்டு தனியார் ஆஸ்பத்திரி சங்கம் முதலாளிமார், உதவி தொழில் ஆணையாளர் ஆகியோருக்கு மிடையே பேச்சு நடத்தப்பட்டது.

இணுவிலிலிருக்கும் சம்பள வேறுபாடுகள், மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அதிகப்படியான சம்பளம் கொடாமை, திரு. ஜே. சின்னையாவின் நியமன மாற்றம், இரண்டு ஆஸ்பத்திரிகளிலும் உள்ள லீவு வேறுபாடுகள், திருமதி விடியர குணத்திலக்காவின் முறைப்பாடு, மானிப்பாய் வேலையாட்களுக்கு ஆஸ்பத்திரி காரைவாலைடக்கு விடுதல் புதிய சம்பள உயர்வு ஆகியனபற்றி ஆராயப் பட்டது.

ஆஸ்பத்திரி சார்பாக டாக்டர் அமரசிங்கம், திரு. ஜெயராசாவும், சங்க சார்பில் திரு. எட்வின் பத்மநாதன் (காரியதரிசி), திரு. சாமுவேல் (தலைவர்), திரு. நாகராசா (யாழ் மாநகரசபை அங்கத்தவர்) ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.

மேலே குறிக்கப்பட்ட அதிகமான கோரிக்கைகளுக்கு முகாமையாளர் இணக்கம் தெரிவித்தார். அத்துடன் ஆஸ்பத்திரி தொழிலாளர் சங்கத்துடன் பரஸ்பர நட்பு கரங்களை நீட்டதாம் ஆயத்தமாய் இருப்பதாயும் முகாமையாளர் வாக்குறுதி கொடுத்தார்.

சம்பள பட்டியல் விஷயமாக மறுபடியும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டது.

# 'உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும்'

## பொருட்காட்சி திறப்பு விழாவில் உடுவில் எம். பி.

யாழ்ப்பாணம், புதன்

"இன்றை இலங்கையின் பொருளாதார நிலை மிகவும் நெருக்கடியான கட்டத்தில் உள்ளது. அதைச் சீர்படுத்தி நாட்டின் பொருளாதார நிலையை நல்நிலைக்கு இட்டுச் செல்வது ஈழத்தின் ஒவ்வொரு பிரஜையினதும் கடமையாகும் என்று உடுவில் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. வி. தருமலிங்கம் கந்தரோடை தையற்கலை மன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற தையற் பொருட்காட்சியில் சிறப்புரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"இப்படியான மாதர் மன்றங்கள் செயல்படுவது நம் நாட்டுப் பெண்கள் ஒவ்வொருவரும் பொறுப்பையுணர்ந்து விட்டார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. சரிந்து விழும் நிலையிலுள்ள எமது பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் இப்படியான மன்றங்களுக்கு அரசாங்கம் உதவி அளிக்க வேண்டும். உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கூடிய அதிகாரம் வழங்குதல் மூலம் தான் கிராமப்புற மக்களின் பிரச்னைகளை இலகுவாகத் தீர்க்க முடியும்."

திருமதி இ. தம்பாபிள்ளையின் தலைமையில் பொருட்காட்சித் திறப்பு விழா நடைபெற்றது. பொருட்காட்சியைத் திருமதி தருமலிங்கம் குத்துவிளக்கேற்றித் திறந்து வைத்தார். திரு. எஸ். எம், அப்புத்துரை திரு. எஸ். பாலசிங்கம், திரு. க. சிவசுப்பிரமணியம் பேசினர்.———

## இலங்கையர்கோன் நினைவு விழா

சுழிபுரம், செவ்வாய்

ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான காலம் சென்ற இலங்கையர்கோனின் மூன்றுவது நினைவு விழா அடுத்த மாதம் 14-ம் திகதி மேற்கு ஏழாலையில் மிகக் கோலாகலமான முறையில் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

## சனசமூகநிலையம் கண்டனம்

யாழ்ப்பாணம், புதன்

ஏழாலை தெற்கு மேற்கு கிராம முன்னேற்றச்சங்க சனசமூகநிலைய நிர்வாகசபை அண்மையில் கூடியபொழுது, பத்திரிகை மசோதாவைக் கண்டிக்கும் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

இவ்வருட முடிவிலே பாடசாலைகள் தரம் பிரிக்கப்படும் பொழுது, ஏழாலை மகாவித்தியாலயத்தை உயர்ந்த தரத்துக்கு உயர்த்துவதின் அவசியத்தை வலியுறுத்தி பாடசாலை அதிபர், உடுவில் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர், வடபகுதி உதவி வித்தியாதிபதி ஆகியோருக்கு ஒரு விண்ணப்பம் அனுப்புவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

(5-ம் கலத் தொடர்ச்சி)

ஆற்றுப் படுக்கைகளில் விளையும் இரத்தினக் கற்களை மட்டும் தனிப்பட்ட முதலாளிகள் வடித்தெடுக்கின்றனர். இதிலும் அபிவிருத்தி செய்வதற்கு பல வேலைகள் இருக்கின்றன: இரத்தினக்கல் கோப்பரேஷன் ஒன்று அரசாங்க ஆதரவில் ஏற்படப் போவதாக சில நாட்களுக்கு முன் ஒரு செய்தி உலவியது. பிறகு அதைப்பற்றி எதுவும் கேள்விப்படவில்லை, ஆதிகாலம் முதல் மாணிக்கத்துக்கும் முத்துக்கும் மரகதத்துக்கும் பேர் போன இலங்கையில் இந்தத் துறையிலாவது சற்று அபிவிருத்தி ஏற்பட்டால் எமது பணமுடையைத் தணிக்கலாமல்லவா?

—"வழிப்போக்கன்"

## நாட்டிலும் நகரிலும்

பூனைகளின் தொல்லை தாங்க முடியவில்லை அவர்களுக்கு. பாற்சட்டியை எச்சில்படுத்தி விடுகின்றன, இரவில் நிம்மதியாகத் தூங்கவிடுவதில்லை. பெருகிக்கொண்டேபோகும் பூனைத் தொகையைக் கட்டுப் படுத்துவதுதான் சரியான வழி என்று தீர்மானித்தார்கள். பெண் பூனைகள் கர்ப்பம் தரிக்காமல் இருப்பதற்கு மருந்து கொடுத்தார்கள். மருந்து நிச்சயமாக எதிர்பார்த்த பலனைக் கொடுக்கும் என்று நம்பலாம். ஆறு குட்டி ஈனும் பூனை ஐந்து குட்டி போட்டுவிட்டு இருக்கட்டுமே!

இது நடந்தது இஸ்ரவேல் தேசத்திலே. பாலைவனக் காடாயிருந்த நாட்டை பழமுதிர் சோலையாக மாற்றியவர்கள் அந்நாட்டு மக்கள். ஐரோப்பாவிலிருந்து துரத்தப்பட்ட யூதர்கள் ஒன்றுக்கும் உதவாதென்று நினைத்திருந்த வனாந்தரத்தில் தங்களுக்கென ஒரு நாட்டை உண்டுபண்ணி அதை செல்வம் கொழிக்கும் அமர பூமியாக்கி உலகத்தின் மதிப்பைப் பெற்றவர்கள். அப்பேர்ப்பட்டவர்கள் பூனைப் பெருக்கத்தைத் தடுப்பதற்கு கர்ப்பத்தடையை மேற்கொண்டிருப்பதில் ஆச்சரியமில்லை.

ஒரு காலத்தில் பூனைவர்க்கத்தின் தொகை அளவுக்கு மீறிப்போய் மனிதவர்க்கத்துக்கு ஆபத்து வந்துவிடலாமோ என்றும் அவர்கள் அஞ்சியிருக்கக்கூடும் ஒரு வீட்டில் பூனையும் குட்டியுமாக நான்கு உருப்படிகள் இருந்துவிட்டால் பால் என்றும், வெண்ணை என்றும், ரொட்டி என்றும் எவ்வளவு உணவுப் பண்டங்கள் அவற்றிற்குச் செலவாகின்றன. பார்க்கப்போனால் மனிதர்களுடைய வயிற்றில் அல்லவா பூனைகள் அடிக்கப்பார்க்கின்றன, மனிதர்களுக்கே போதிய உணவில்லாமல் இருக்கும்போது பூனைகளுக்கும் தீனி போடுவதென்றால் எப்படி?

உலக சனத்தொகை 300 கோடிக்கு அதிகமாகிவிட்டதென்றும், இப்படியே மனிதகுலம் பெருகிக்கொண்டு போகும் பட்சத்தில் அவர்களுக்கே போதிய உணவு கிடைக்காமல் போய்விடக் கூடுமென்றும், கடலுக்குள் இருக்கும் பாசி, சாதாளை முதலியவற்றிலிருந்து உணவுப் பண்டங்கள் சரிக்கட்டவேண்டுமென்றும் உலகத்து விஞ்ஞானிகள் எல்லோரும் கவலைப்பட்டுத் தலையிலடித்துக்கொள்ளுகிறார்கள். இந்த நிலைமையில் பூனையினம் பெருகிவிட்டால் சாப்பாட்டுக்கு எங்கே போவது?

நேற்று முளைத்த இஸ்ரவேல் நாட்டில் விஞ்ஞான ஆராய்ச்சிகளும் சாதனைகளும் இவ்வளவு தூரத்துக்கு முன்னே நிவிட்டன என்பதை நினைத்து நாமெல்லோரும் பெருமைப்பட வேண்டியிருக்கிறது. ஏனென்றால், நம் நாட்டிலுள்ள நிலவளத்தையும் நீர்வளத்தையும் மலை வளத்தையும் நாம் பூரணமாகப் பயன்படுத்தவில்லை.

சென்ற வாரம், பதுளைக்கருகாமையிலுள்ள 'சொர்ணத் தோட்டம்' என்னுமிடத்தில் மண்ணெண்ணெயைப் போன்ற ஒரு பதார்த்தம் நிலத்தில் கசிவதாகப் பத்திரிகையில் வாசித்தபோது இந்தக் கவலை உண்டாயிற்று. இலங்கையில் விண்ணோங்கி நிற்கும் மலைகளிலும், பள்ளத்தாக்குகளிலும் எவ்வளவு செல்வம் புதைந்து கிடக்கிறதோ நாம் அறியோம். வீட்டில் விளக்கு ஏற்றுவதற்கு அயல் நாட்டு மண்ணெண்ணெயையே இன்றும் நம்பியிருக்கும் நாம் எங்கள் நாட்டிலுள்ள மலைக்குன்றுகளில் எண்ணை இருக்கிறதா, நிலக்கரி இருக்கிறதா, உலோகங்கள் இருக்கின்றனவா என்று சோதனைகள் நடாத்தவில்லை.

(4-ம் கலம் பார்க்க)

இந்தியர் பிரச்னை

# இலங்கை-பாரத கருத்துவேற்றுமை குறைகிறது?

புதுடில்லி, அக். 27

இலங்கை-இந்தியர் பிரச்னை பற்றி இருநாட்டுத் தூதுகோஷ்டிகளுக்குமிடையே ஏற்பட்டிருந்த பிளவு இப்போது குறுகிவிட்டதாக அறிவிக்கப்படுகின்றது. நேற்றிரவு சாஸ்திரி-சிறிமா ஒன்றரை மணி நேரம் சந்தித்தபின் இந்த அபிவிருத்தி ஏற்பட்டதாய்க் கூறப்பட்டது.

எனினும் இன்னும் சில பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டியிருக்கின்றன என இந்திய அதிகாரி ஒருவர் கூறினர். அதேசமயம் தீர்வுக்கான சாத்தியம் பற்றி டில்லியில் உணரப்பட்டுவருவதாய் ஒரு செய்தி கூறுகிறது.

இரு பிரதம மந்திரிகளும் இன்று பகல் மீண்டும் சந்தித்துப் பேசினர்.

# பாக். நாசவேலை: தலைவர் சுட்டுப் பலி

ஜம்மு, அக். 27

பாகிஸ்தான் நாசவேலை கோஷ்டியின் தலைவரை இந்திய எல்லைப் பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.

இக்கோஷ்டி எல்லையைத் தாண்டிவந்து கிராமம் ஒன்றைச் சூறையாட முயன்றது. இந்திய எல்லைப் பொலிஸார் விரைந்து சென்று எதிர்த்த போது அது தப்பியோட முயன்றது. துப்பாக்கிச் சூடுபட்ட தலைவர் ஸ்தலத்திலேயே மாண்டார். மற்றவர் ஓடிவிட்டனர்.

# கேரள பொதுத் தேர்தலில் தி. மு. க. போட்டியிடும்

திருவனந்தபுரம், அக். 27

கேரள பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிடத் தீர்மானித்திருக்கிறது.

எந்த தொகுதிகளில் போட்டியிடலாம், மற்றக் கட்சிகளுடன் எவ்வித உடன்பாடுகள் செய்துகொள்ளலாம் என்பது போன்ற தேர்தல் தந்திரோபாயங்களை முடிவுசெய்ய ஐவர் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது. அண்ணாதுரையை கலந்தாலோசித்த பின்பே இக் கமிட்டி மேற்கண்ட விஷயங்களை முடிவுசெய்யும்.

காங்கிரஸுடன் தேர்தல் உடன்பாடு எதுவும் இராது. அதைத் தோற்கடிப்பதே லட்சியமென ஸ்தலப் பிரமுகர் ஒருவர் கூறினர்.

கேரளத்தில் சுமார் 300 தி. மு. க. கிளைகள் உண்டு. 7,000 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். பாலக்காடு, எர்ணாகுளம், கோட்டயம், திருவனந்தபுரம் ஆகிய 4 ஜில்லாக்களில் கழகத்திற்கு நல்ல ஆதரவு இருக்கிறதென காரியதரிசி திரு. என். வி. நடராசன் கூறினர்.

காங்கிரஸ் அதிருப்தியாளரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள "கேரள காங்கிரஸ்" முஸ்லிம் லீகுடனும், சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியுடனும் மட்டுமே கூட்டுச் சேரும் என அதன் காரியதரிசி அறிவித்தார்.

# சூடான் மந்திரிசபை பதவி நீக்கம்

கார்ட்டூம், அக். 27

சூடானில் அதிபர் அபூத் முப்படைகளின் உயர் சபையைக் கலைத்துவிட்டார். மந்திரி சபையையும் பதவிநீக்கம் செய்த அவர் நாட்டின் எல்லா அதிகாரங்களையும் தாமே ஏற்றுக் கொண்டார்.

கடந்த இரு தினங்களாக நாட்டில் ஏற்பட்ட கலவரங்களையடுத்து இந்த நடவடிக்கையை அதிபர் மேற்கொண்டார்.

கார்டூமில் நேற்று ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டது.

புதிய அரசாங்கம் பதவி ஏற்கும்வரை அதிபரும், ராணுவமும் ஆட்சியை நடத்தும் என திரு. அபூத் அறிவித்தார்.

சூடானில் பல நகரங்களில் வேலை நிறுத்தம் பரவியுள்ளதாக சில செய்திகள் கூறுகின்றன.

# வர்த்தகர்களுக்கு கடும் தண்டனை அளிக்க சாஸ்திரி அறிவுறுத்து

## டில்லியில் முதன் மந்திரிகள் மகாநாடு

புதுடில்லி, அக். 27

நேற்று டில்லியில் கூடிய முதன்மந்திரிகள் உணவுக் கொள்கையின் பல்வேறு அம்சங்கள்பற்றியும் ஆராய்ச்சி நடத்தினர்.

மத்திய உணவுமந்திரி திரு. சுப்பிரமண்யம் பலயோசனைகளைத் தெரிவித்தார். பம்பாய், கல்கத்தா போன்ற 10 லட்சம் மக்களுக்கு மேற்பட்ட பெரிய நகரங்களில் சட்டபூர்வமான ரேஷன் முறையைக் கொண்டு வர வேண்டுமென்றும், 1 லட்சத்துக்கு மேற்பட்ட மக்களைக் கொண்ட நகரங்களில் சாதாரண ரேஷனை அமுலாக்க வேண்டும் என்பதும் அவர் கூறிய யோசனைகளில் சில.

மந்திரிகள் திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி, திரு. நந்தா ஆகியோரும் ஆலோசனைகளில் பங்குபற்றினர். பிரதமர் திரு லால்பகதூர்சாஸ்திரி பேசுகையில், அரசாங்க விலைக்கட்டுப்பாட்டுக்கு மேல் உணவுப் பொருட்களை கூடுதல் விலைக்கு விற்கும் வர்த்தகர்கள் உடனடியாக விசாரணை செய்யப்பட்டுத் தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர்களது வர்த்தக லைசன்ஸ்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என்றும் கூறினர்.

வர்த்தகர்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவில்லை என்பது இப்போது தமக்கு நன்கு புரிந்துவிட்டதென்றும், அவர்கள் சொன்னபடி நடவடிக்கைகளிலிறங்கினுல் ராஜ்ய அரசாங்கங்கள் உடனடியாக விசாரித்து கடும் அபராதம், லைசன்ஸ்களை ரத்துச் செய்தல், இதர கடுந்தண்டனைகள் ஆகியவற்றை அளிக்க துரிதமாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் இந்தியப்பிரதமர் அறிவுறுத்தினர்.

உணவுமந்திரி திரு. சுப்ரமண்யம் பேசுகையில் தாம் கடந்த 4 மாதங்களில் வர்த்தகர்களின் போக்கை உணர்ந்து விட்டதாயும் அரசாங்கத்துடன் அவர்கள் ஒத்துழைக்கவில்லை என்றும் கூறினர்.

காங்கிரஸ் காரியக்கமிட்டி நேற்றுக்கூடி 60 நிமிடநேரம் உணவுப் பிரச்னைபற்றி ஆலோசனை நடத்தியது. முதனமந்திரிகளுடன் கலந்த பின்பும், ரேஷன் முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என அரசாங்கம் கருதினுல் காங்கிரஸ் காரியக் கமிட்டி அதை அங்கீகரிக்கும் என உயர் அதிகாரி ஒருவர் கூறினர்.

# "சிங்களம் கற்றால் வேலை தருவேன்"

## தமிழ் பட்டதாரிகளுக்கு கல்வி மந்திரி உபதேசம்

கொழும்பு, செவ்வாய்

விஞ்ஞானத்தில் பட்டம் பெற்ற தமிழ் மாணவர்களை சிங்களம் கற்குமாறு கல்விமந்திரி திரு. கலுகல்ல புதிய விஞ்ஞானப் பட்டதாரிகள் சங்கக் கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

தமிழ் விஞ்ஞான மாணவர்கள் சிங்களம் கற்றால் எப்போதும் அவர்களுக்கு வேலை கிடைக்குமென்றும் மந்திரி கூறினர்.

"2000 சர்வகலாசாலைப் பட்டதாரிகளுக்கு வேலைகொடுப்பது பெரும் கஷ்டமான விஷயம். ஆனல் கல்வி அமைச்சு தன்னால் இயன்ற அளவு உதவிகளைச் செய்யும்.

இவர்களில் சுமார் 1000 பேர்களுக்கு கல்வி அமைச்சு வேலையளிக்கமுடியும். அதுவும் கஷ்டத்துடனேயே அப்படிச் செய்யமுடியும். மிகுதிப்பேர் விஷயம்பற்றி இதர மந்திரிகளுடன் விவாதிப்பேன்" என்றும் மந்திரி கூறினர்.

# ரயில் விபத்தில் 25-வது நபர் மரணம்

கொழும்பு, செவ்வாய்

மன்னர் செட்டிகுளத்தைச் சேர்ந்த 51 வயதான சரகோரி ஜெனரல் ஆஸ்பத்திரியில் காலமானர். வில்லவத்தை ரயில் விபத்தில் இவர் மூர்ச்சையுற்றிருந்தார். இவருடன் சேர்ந்து மொத்தம் 25 பேர் ரயில் விபத்தில் பலியாகியிருக்கிறார்கள்.

அரசாங்க ஊழியருக்கு

# மாதம் இருதடவை சம்பளம்

கொழும்பு, செவ்வாய்

அடுத்த மாதம் முதல் அரசாங்க ஊழியர்களின் சம்பளம் மாதம் இரு தடவைகளில் அளிக்கப்படும்.

ஒவ்வொருமாதமும் 10-ம் திகதியும் 25-ம் திகதியும் இச் சம்பளம் வழங்கப்படும்.

அடிப்படைச் சம்பளத்தில் 60 சத வீதம் 10-ம் திகதியும், மிகுதிச் சம்பளமும் அலவன்சும் 25-ம் திகதியும் வழங்கப்படும்.

# "அடுத்த தேர்தலில் காங்கிரஸ் பதவிக்கு வருவது சந்தேகம்"

## பெரியார் ஈ. வே. ரா. கருத்து

திருச்சி, அக். 26

பொதுத்தேர்தலில் காங்கிரஸ் திரும்பவும் பதவிக்கு வருவதற்கு பாதிவாய்ப்புத்தான் உள்ளது" என பெரியார் ஈ. வே. ராமசாமி இங்கு பொதுக்கூட்டம் ஒன்றில் கூறினர்.

"பாமர மக்களின் மேம்பாட்டுக்கு காங்கிரஸ் செய்துள்ள பல நல்ல காரியங்களை மக்கள் உணரவில்லை. 'இந்த முட்டாள் மக்களுக்கு' காங்கிரஸ் ஆட்சின் நன்மை தெரிவதற்காவது காங்கிரஸ் தோற்றால் கூடநல்லது" என்ருர் ஈ.வே.ரா.

சட்டசபையிலுள்ள எதிர்க் கட்சியினர் சமீபத்தில் மேற்கொண்ட உண்ணாவிரதத்தை பெரியார் கண்டித்தார்.

இம்மாதிரி உண்ணாவிரதங்களினுல் உணவுப்பற்றுக்குறை நீங்கிவிடாது. மக்களின் வாங்கும் சக்தி அதிகரித்திருப்பதால் விலைவாசி உயர்வு நியாயம்தான்" என்றும் அவர் கூறினர்.

இக்கூட்டத்திற்கு திரு. எஸ். நாகமுத்து தலைமை வகித்தார்.

# தீ விபத்து

பம்பாய், அக். 27

பம்பாயில் தீவிபத்து ஏற்பட்டது காரணமாய் 8 மாடிக் கட்டடம் ஒன்றும், மோட்டார் டயர் கிடங்கு ஒன்றும் நாசமாயிற்று.

# பிரிட்டிஷ் பொருளாதாரம்

லண்டன், அக். 27

பிரிட்டனின் கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் ரேடியோ ஒலிபரப்பு மூலம் கேட்டுக் கொண்டார்.

பிரிட்டிஷ் இறக்குமதிப் பொருட்கள் பலவற்றிற்கு 15 சத விகித தற்காலிக இறக்குமதித் தீர்வையை அவர் வெளியிட்டார்.

பிரிட்டிஷ் பிரதமரின் பொருளாதாரத் திட்டம் பற்றி பல பிரிட்டிஷ் பத்திரிகைகளும், பல நாடுகளும் சாதக, பாதக அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றன.

# கான்

ஸைகோன், அக். 27

தென்வியட்னமில் புதிய மந்திரிசபை ஏற்படும்வரை பதவியில் இருக்குமாறு பதவியிலிருந்து விலகும் பிரதமர் திரு. கானை அந்நாட்டு அதிபர் கேட்டுக் கொண்டிருக்கிருர்.

# வாக்கர்

வாஷிங்டன், அக். 27

பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. கோர்டன் வாக்கர் இன்று ஜனதிபதி ஜோன்ஸனைச் சந்தித்தார். நேற்று அவர் வெளிநாட்டு மந்திரி ரஸ்கைச் சந்தித்தார்.

# சீன அணுகுண்டு

ஹுஸ்லி, அக். 27

சீனுவின் அணுக்குண்டு சோதனை தம்மை ஆழ்ந்த வருத்தத்தில் ஆழ்த்தி விட்டது என ஸாம்பியா அதிபர் திரு. கென்னத் கவுண்டா கூறினர். சீன, சர்வதேச ஒழுங்குக் கட்டுப்பாட்டை அனுசரிக்கும் பொருட்டு அதை ஐ. நா. வில் சேர்க்க வேண்டும் என்றும் அவர் கூறினர்.

# வெள்ளத்துக்கு 45 பேர் பலி

புதுடில்லி, அக். 27

பீஜப்பூரில் ஏற்பட்ட கடுமழை காரணமாக 31000 வீடுகள் இடிந்தன என்றும் 2 லட்சத்துக்கு அதிகமானேர் வீடிழந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. 45 பேர் மாண்டனர். 7000 ஏக்கர் விளைநிலம் நாசமாயிற்று.

# இந்தியாவும் அணு ஆயுதமும்

## யு. எஸ். கருத்து

வாஷிங்டன், அக். 27

அணுக்குண்டுகளை குறைந்த செலவில் தயாரிக்க முடியும் என இந்திய அணுசக்திக் கமிஷன் தலைவர் டாக்டர் பாபா தெரிவித்துள்ள கருத்தை இங்குள்ள நிபுணர்கள் பூரணமாக ஆதரிக்கின்றனர். அணுஆயுத சக்தியை இந்தியா பெற முடியும் என்பதை கடந்த சில தினங்களில் அமெரிக்க டயர் அதிகாரிகள் சூசகமாகக்குறிப்பிட்டிருக்கின்றனர்.

சீனுவுக்கு சமமான ஆயுத பலத்தை இந்தியா பெறமுடியும் என அவர்கள் குறிப்பிட்டனர்.

அணுக்குண்டை இந்தியா உருவாக்க அமெரிக்கா எதிர்ப்பதற்கு மூலகாரணம் இந்தியா பாகிஸ்தான் இரண்டிடமும் அது அக்கறை கொண்டிருப்பதேயாகும். இந்தியா அணுக்குண்டைத் தயாரிக்குமானல் பாகிஸ்தானுடன் இந்திய உறவு மோசமடையுமென யு. எஸ். கருதுகிறது.

# இந்தியா அணுக்குண்டு செய்யாது

புதுடில்லி, அக். 27

சீன அணுக்குண்டு செய்து பரீட்சித்ததால் இந்தியாவும் அப்படிச் செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை என பாதுகாப்பு மந்திரி திரு சாவன் கூறினர். இந்தியா புதிய நிலைமைக்குப் பின்பும் அணு ஆயுத உற்பத்தியில் இறங்குவதில்லை என்ற உறுதி கொண்டிருப்பதால்தான். பெரும் பாலான உலக நாடுகள் நட்புக் கொண்டிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

# கிரம்ளின் அதிகார மாற்றம்பற்றி ஆலோசனை

மாஸ்கோ, அக். 27

சோவியத்தின் புதிய தலைவர்கள் கிரம்ளின் அதிகார மாற்றம் குறித்து பல உலக நாடுகளின் கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் ஆலோசனை கலந்துவருகிருர்கள், வெளிநாட்டு கம்யூனிஸ்ட் தலைவர்கள் சிலர் திரு. குருஷ்சேவை நேரில் சந்திக்கவேண்டுமென வற்புறுத்தியதாகத் தெரிகிறது. திரு குருஷ்சேவின் இருப்பிடம் எங்கே என்பது இன்னும் தெரியவில்லை.

# "ஜப்பானிகா இந்தியா"

சென்னை, அக். 27

தமிழ்நாட்டில் "ஜப்பானிகா இந்தியா" என்ற புதியரக நெல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. குருவைட் புழுங்கல் அரிசியை விட இது மிக ருசியானது எனக் கூறப்பட்டது.

# சாவன் பிரிட்டிஷ் விஜயம்

புதுடில்லி, அக். 27

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அழைப்பிற்கிணங்க இந்தியப் பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் வருகிற 11-ம் திகதி பிரிட்டன் செல்கிருர். ஒரு வாரகாலம் அங்கு தங்கும் அவர் பிரிட்டிஷ் தலைவர்களுடன் பேச்சு நடத்துவார்.

# பாரத—யு. எஸ். விமான ஒப்பந்தம்

புதுடில்லி, அக். 27

அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையே ஏற்பட்டுள்ள புதிய விமானப்போக்குவரத்து ஒப்பந்தப்படி 'ஏர் இந்தியா' விமானம் தினசரி நியூயோர்க் சென்றுவரும் என அறிவிக்கப்பட்டது.

# ஸ்ரீமதி காந்தி

பெல்கிரேட், அக். 27

ஸ்ரீமதி இந்திராகாந்தி நேற்று யூகோஸ்லேவிய அதிபர் டிட்டோவைச் சந்தித்தார்.

# நல் வாழ்வுக்கு வழிகாட்டும் இலக்கியம் வேண்டும்

## இலக்கிய விழாவில் பேச்சு

மாவிட்டபுரம், செவ்

"இலக்கியம் வாழ்வின் வழிகாட்டி. அதன்மூலம் மக்கள் சமுதாயத்தை நன்நெறியில் இட்டுச்செல்லவும் முடியும். தீ நெறியில் இட்டுச்செல்லவும் முடியும். எனவே இலக்கியகர்த்தாவின் கடமை மகத்தானதாக விளங்குகிறது. மக்கள் வாழ்க்கையை உயர்ந்த நெறியிலிட்டுச்செல்லும் உன்னத சிருஷ்டிகளைப் போற்றுவோம். மக்கள் வாழ்க்கைக்கு உதவாத, மரபிற்கு முரண்பட்ட படைப்புக்களைத் தூர விலக்குவோம். இதுவே இன்று நாம் கைக்கொள்ளத் தக்க வழியாகும்."

இவ்வாறு உள்ளூராட்சி விசாரணையாளர் திரு வி. சி. சண்முகம் கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் சபாபதி நாவலர் அரங்கில் நடைபெற்ற இலக்கிய விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளைத் தொடக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வலிகாமம் கிழக்கு உள்ளூராட்சிமன்றங்களின் ஆதரவில் யாழ்ப்பாணம் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் நடாத்தும் இலக்கிய விழாவின் 2ம் நாள் நிகழ்ச்சிகள் நேற்று மாலை 4 மணிக்கு இருபாலைச் சந்தியிலிருந்து புறப்பட்ட ஊர்வலத்துடன் ஆரம்பமாயின.

உள்ளூராட்சித் துணை ஆணையாளர் திரு. து. இராசேந்திராவும், ஏனைய பிரமுகர்களும் மேளவாத்தியங்கள் முழங்க கிராமிய நடனங்களுடன் ஊர்வலமாக இலக்கியவிழா அரங்கிற்கு அழைத்துவரப்பட்டனர். கோப்பாய் எம். பி திரு. மு. பாலசுந்தரம் விழாக்கொடியை ஏற்றிவைத்தார். செல்வி க. சந்தனநங்கையின் தமிழ் வணக்கத்தைத் தொடர்ந்து கோப்பாய்க் கிராமசபையின் உப தலைவர் திரு. பொ. தி. சம்பந்தர் வரவேற்புரை நிகழ்த்தினர்.

சமூகஜோதி இராசவாசல் முதலியார் சி. தியாகராசா விழாவுக்குத் தலைமைவகித்தார்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ந. சிவராசா 'இலக்கியமும் வாழ்வும்' என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் இலக்கியம் வாழ்க்கையைச் செப்பனிடவல்லதென்றும், அறம், பொருள் இன்பம் அனைத்தும் நல்கி மக்களை நன்னெறியில் இட்டுச் செல்லும் வன்மை அதற்குண்டென்றும் கூறினர்.

இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. ச. தனஞ்சயராசசிங்கம் 'தமிழிலக்கியத்தில் பிறர்க்கென வாழ்தல்' என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் தமிழ்மக்களின் சனசமூக சேவையினைச் சங்க இலக்கியங்கள் நன்குணர்த்துகின்றன என்றும், பிறர்க்கென வாழும் பேரின்ப வாழ்க்கையினையே தமிழ் மக்கள் உயர்ந்த வாழ்வாகக் கொண்டார்கள் என்றும் கூறினர்.

வித்துவான் நா. கணேசனர் 'கம்பன் காட்டும் அழகு'பற்றி எடுத்துரைத்தார்.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உள்ளூராட்சித் துணைத் தூதுவர் திரு து. இராசேந்திரா பேசுகையில் வடபகுதியில் சனசமூக நிலைய இயக்கம் ஆற்றிவரும் தொண்டுகளைப் பெரிதும் பாராட்டினர். சனசமூக நிலையங்களின் சமாசமும், உள்ளூராட்சி மன்றங்களும் ஒன்று சேர்ந்து நடத்தும் இவ்விலக்கிய விழா நாடு முழுமைக்கும் நல்லதோர் எடுத்துக்காட்டாக விளங்குகிறதென்றும் அவர் குறிப்பிட்டார். போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களையும் திரு. இராசேந்திரா வழங்கினர்.

இலக்கிய விழாவின் கலை நிகழ்ச்சிகள் அச்சுவேலிக் கிராமசபைத் தலைவர் திரு. க. சுந்தரமூர்த்தி தலைமையில் சிவசங்கர பண்டிதர் அரங்கில் நடைபெற்றன.

# தொழில் நுட்பக் கல்லூரியின் சேவை

யாழ்ப்பாணம், புதன்

இவ்வருடம் மே மாதத்தில் லண்டன் "சிற்றி அன்ட் கில்ட்ஸ்" ஸ்தாபனத்தாரால் இலங்கையில் நடாத்தப்பட்ட மின்பொறியியல் பிரவேசப் பரீட்சையில் யாழ்ப்பாணம் சுண்டிக்குளி தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து தோற்றிய 13 மாணவர்களில் பின்வருவோர் சித்தியடைந்துள்ளனர்:

எம். வி. அன்தோனிற்றே, பி. காங்கேயநாதன், எம். கந்தசாமி, ஆர். சச்சிதானந்தமூர்த்தி, ஆர். தங்கதுரை, எம். சிவகுமாரன், ஏ. சண்முகதாஸ், வி. சுந்தரேஸ்வரன், வி. சற்குணம், எஸ். மகாதேவன்.

எம். தில்லைநாதன், என். குருதாசன் ஆகியோர் ஒரு பகுதியில் சித்தியடைந்துள்ளனர்.

இதே ஸ்தாபனத்தாரால் நடாத்தப்பட்ட மத்தியதரப் பரீட்சையில் சுண்டிக்குளி தொழில்நுட்பக் கல்லூரிமாணவர் 11 பேரில் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:

கே. தெய்வேந்திரன், எஸ். குணபாலசிங்கம், எஸ். கணேசன், சி. நற்குணமாணிக்கம், எஸ். செந்திநாதன் ஒரு பகுதியில் சித்தியடைந்துள்ளார்கள்.

இக்கல்லூரி சென்ற ஐந்தாண்டுகளாகப் பள்ளிக்கூடப் படிப்பை முடித்துக் கொண்டு மேற்செய்வதென்னவெனத் தயங்கும் இளைஞர்களிடையே தொழில்நுட்ப அறிவை வளர்த்து, பலதுறைகளிலும் விசேஷ பயிற்சி அளித்து, பரீட்சைகளில் சித்தியடைந்தவர்கள் நல்ல வேலைவாய்ப்பு பெறக்கூடிய வழிவகைகளைச் செய்து வருகின்றது.

# வர்த்தக மாணவ ஆசிரியரை நியமிக்க

## தமிழ் எம். பி.க்கள் தந்தி

சுழிபுரம், செவ்வாய்

200 தமிழ்ப்பகுதி பாடசாலைகளுக்கு மாணவ வர்த்தக ஆசிரியரை நியமிக்குமாறு கோரி வட்டுக்கோட்டை, பருத்தித்துறை, உடுவில், யாழ்ப்பாணம் ஆகிய தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கல்விமந்திரிக்கு தந்தி அனுப்பியுள்ளனர். அத்தந்தியில் கூறப்படுவதாவது:

1-10-64-ல் 250 சிங்கள மாணவ வர்த்தக ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெற்றுள்ளது. ஆனால் தமிழ்பகுதியில் இருந்து மாணவ வர்த்தக ஆசிரியர்களை நியமிப்பதற்கு அரசினர் பாரபட்ச நடவடிக்கையை மேற்கொள்வது வருத்தத்திற்குரியதாகும். வர்த்தக ஆசிரியர் நியமனம் கோரி விண்ணப்பித்துள்ள 200 பாடசாலைகளுக்கும் 1965-ல் இருந்து மாணவ வர்த்தக ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கவும் அல்லது 1964-ல் நடைபெற்ற விசேட வர்த்தக ஆசிரிய புகுமுக பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு 1965 தை மாதத்தில் இருந்து நியமனம் வழங்க உடன் ஒழுங்குகள் மேற்கொள்ளவும்.

# சைவசமயத்துக்கு புத்துயிரளிக்க ஆதீனம் நிறுவவேண்டும்

## குமாரசாமிப்புலவர் பாராட்டு விழாவில் உடுப்பிட்டி எம். பி. வலியுறுத்து

உடுப்பிட்டி, செவ்வாய்

சைவப்பெரியார் கொக்குவில் குமாரசாமிப்புலவரின் சைவப்பணிநலம் பாராட்டி பொன்னுடை போர்த்திப் பொற்கிழி வழங்கிய விழா கரவை மாணிக்கவாசக வித்தியாமண்டபத்தில் வித்துவான் க. நடராசா தலைமையில் நடைபெற்றது.

கரவெட்டி சைவாபிமானிகள் சார்பில் இளைப்பாறிய ஆசிரியரால் உபசாரப்பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில், "யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலருக்குப்பிறகு சைவம் வளர்த்த பெரியார் திரு. குமாரசாமிப்புலவர். கல்வியின் நோக்கம் இன்று அரசாங்க உத்தியோகமாகவே இருக்கிறது. சமயக்கல்வி புறக்கணிக்கப்படுகிறது. பாண்டியனும் சோழனும் அன்று சைவமும் தமிழும் வளர்த்தார்கள். இன்று அவற்றை வளர்ப்பது பொதுமக்களாகிய நமது கடனாகும். நமது நாட்டில் சைவ சமயம் குன்றி வருகிறது. கோணேஸ்வரத்தில் புத்தசமயமும், திருக்கேதீஸ்வரத்தில் வேறு சமயமும் புகுந்து விட்டன. நமது மக்களுக்கு சமயத்தைப் பாதுகாக்கும் உணர்ச்சியை ஏற்படுத்த ஓர் ஆதீனம் தேவை. அப்போது தான் சைவத்துக்கு புத்துயிரளிக்க முடியும்" என்று குறிப்பிட்டார்.

திரு. க. கார்த்திகேசு புலவருக்குப் பொன்னுடைபோர்த்தினர்.

வடமராட்சி மத்திய கல்லூரி அதிபர் திரு. வே. கந்தப்பு பொற்கிழி அளித்துப் புலவரை கௌரவித்தார். பண்டிதர் திரு. பொ. கிருஷ்ணபிள்ளை புலவரைப் பாராட்டிப் பேசினர்.

திரு. குமாரசாமிப்புலவர் தமக்களிக்கப்பட்ட கௌரவத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசினர்.

# உயர்நீதிமன்றத்துக்கு அஸிட் வழக்கு

கொழும்பு, செவ்வாய்

சென்ற ஆகஸ்ட் மாதத்தில் திருவாளர்கள் மகேந்திரன், சண்முகம் ஆகிய இரு உதவிப் பொலிஸ் சுப்ரீண்டன்கள் மீது அஸிட் வீசியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட எச். ஏ. சிறிசேன என்பவரை கொழும்பு உயர்நீதிபதி, சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு பாரப்படுத்தினர்.

சிறிசேன தான் குற்றவாளி அல்லவெனக் கூறினர்.

# ஊர்வலம் பற்றி எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆலோசனை

கொழும்பு, செவ்வாய்

பத்திரிகை மசோதாவை ஆட்சேபிக்கும்பொருட்டு கதிர்காமம் சென்ற பிக்குகளின் ஊர்வலத்தில் கோனவலையிலும், கந்தாரையிலும் கல் வீசப்பட்டதை இவ்வாரம் எதிர்க்கட்சித் தலைவர்கள் விவாதிக்கவிருக்கிறார்கள்.

ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன் 485
2-30, 6-30 & 9-45 p.m.
DICKTRCY
AND THE G MAN
( Serial )

REGAL — JAFFNA
NOW SHOWING
John Derek — Elaine Stewart
IN
TALES OF A
CAPTIVE PRINCESS
(Colourscope)

# பொலிஸ் கான்ஸ்டபிளை தாக்கியதாக வழக்கு

## இராணுவ பொலிஸ்மீதும் மற்றொருவர்மீதும் குற்றச்சாட்டு

சாவகச்சேரி, புதன்

'பொலிஸ்கான்ஸ்டபிளைத்தாக்கியதாகத் தொடரப்பட்ட வழக்கு நேற்று காலை சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு றொபர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சாவகச்சேரி பொலிஸ் கான்ஸ்டபிளும் தாக்கப்பட்டவருமான பியரத்ன சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் இம்மாதம் 22-ம் திகதி இரவு பத்துமணிக்கு சாவகச்சேரி பொலிஸ் கான்ஸ்டபிள் பியரத்னவை கொழும்பில் இராணுவ பொலிஸாராக கடமையாற்றுபவரும் கொக்குவிலைச் சேர்ந்தவருமான கே. சி. பாலசிங்கமும், கோப்பாயைச் சேர்ந்த எஸ். செல்லையாவும் தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. ஆர். டி. சிவகுரு ஆஜரானர் சாவகச்சேரி பொலிஸ் சார்ஜன்ட் திரு. மகாலிங்கம் வழக்கை நடத்தினர்.

பியரத்ன சாட்சியமளித்தபோது கூறியதாவது: "சம்பவம் நடந்ததினம் நான் சாவகச்சேரி தெய்வேந்திரா படமாளிகைக்கு படம்பார்க்க போனேன். அப்பொழுது காருக்குப்பக்கத்தில் இரு எதிரிகளும் நின்றார்கள் இருவரும் மதுபானம் அருந்தியிருந்தார்கள். 'நீ பொலிஸ்காரனடா!' என்றார்கள் நான் ஆம் என்றேன் உடனே 2-ம் எதிரி கழுத்தில் ... 1-ம் எதிரியும் அடித்தார். என்னால் எதுவும் செய்ய முடியாததால், பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறையிட்டேன்."

எதிரிகள் இருவரையும் சார்ஜன் மகாலிங்கம் இம்மாதம் 23-ம் திகதி சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர் செய்தபோது இருவரையும் தலா 300 ரூபா பிணையில் செல்ல மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

மீண்டும் நேற்றுக்காலை எதிரிகள் இருவரும் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜரானர்கள்.

பியரத்ன சாட்சியமளித்தபின் மாஜிஸ்டிரேட் நவம்பர் 24-ம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்தார்.

# "பீடித் தொழிலாளரின் கஷ்டம்"

கட்டுநாயக்கா, செவ்


"அரசாங்கத்தினல் நடைமுறையில்கையாளப்பட்டுவரும் பீடி சுற்றும் இலைகள் இறக்குமதிக்கொள்கையினல் 100,000 பீடித்தொழிலாளர்கள் வேலையின்றி கஷ்டப்படுகின்றார்கள்" என்று ஐக்கிய பீடித்தொழிலாளர் சங்க உதவிக்காரியதரிசி திரு. எஸ். பி. அந்தனி நீர்கொழும்பு கிளையின் விசேஷ கூட்டமொன்றில் பேசும்பொழுது குறிப்பிட்டார். கூட்டத்திற்கு திரு. எஸ். எஸ். இராஜா தலைமைதாங்கினர்.

# சன சமூக நிலைய ஆண்டு விழா

பருத்தித்துறை, செவ்.

சந்தைதோட்டம் சனசமூக நிலைய ஆண்டு நிறைவு விழா வடமராச்சிப் பகுதிக் காரியாதிகாரி திரு. யே. டி. ஆர்னல்ட் தலைமையில் நடைபெற்றது. அமரர் பொன் கந்தையாவின் உருவப்படத் திரை நீக்கத்துடன் ஆரம்பமான இவ்விழாவில் க. ஜெயக்கொடி வே. ஜேகேந்திரபோஸ், வே. இரத்தினம், வ. சிவலிங்கம் ஆகியோர் பேசியதைத் தொடர்ந்து திருமதி யே. டி. ஆர்னல்ட் பரிசில்களை வழங்கினர்.

கடைசி வாரம்!
கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன்
(கொழும்பு)(வெள்ளவத்தை) (யாழ்ப்பாணம்)
விஜயா ஸ்ரீ கிருஷ்ண மொடர்ன்
(மட்டக்களப்பு) (திருமலை) (பதுளை)
விஜிதா
(ஹட்டன்



எம். ஜி. ராமச்சந்திரன் - சரோஜாதேவி
மற்றும் பலர் நடிக்கும்
பணக்கார குடும்பம்

# ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி இரட்டிப்பு

சாவகச்சேரி, செவ்வாய் ஆனையிறவில் உள்ள அரசாங்க உப்பளத்தில் இந்த வருடம் சுமார் 26,000 தொன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த வருட உற்பத்தியின் இருமடங்காகும்.

இலங்கையில் உள்ள மற்றைய உப்பளங்களில் உற்பத்தி குறைந்து வரும் இந்தச் சமயத்தில் ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி அதிகமாகி வருவது இங்கு குறிப்பிடத் தக்கது.

உப்புச் செய்கைக்கு ஏற்ற வசதிகள் நிறைந்த இந்த உப்பளம் விஸ்தரிக்கப்பட்டு தேவையான இயந்திர வசதிகளுடன் விருத்தி செய்யப்பட்டால் இலங்கை முழுவதற்கும் தேவையான அளவு உப்பை குறுகிய காலத்தில் இங்கு விளைவிக்கமுடியும் என அதிகாரிகள் நம்புகின்றனர்.


"உங்களுடைய
**வேப்பர் கிறீம்**
அளிக்கும்
நிவாரணம் காரணமாக தடிமனால் பிடிக்கப்பட்ட போதும் எனது மகனால் இரவில் அமைதியாக நித்திரை செல்ல முடிகிறது"
—திருமதி ஐ. டி. எஸ்.




உங்கள் குழந்தையின் நன்மைக்காக எப்பொழுதும் கிறேசன்ஸ் வேப்பர் கிறீமையே கேட்டுவாங்குங்கள்.
எல்லா மருந்துக் கடைகளிலும் பலசரக்குக் கடைகளிலும் கிடைக்கும்


## ஆசிரியரிடம் வழிப்பறி

காங்கேசன்துறை, செவ்வாய் நேற்றுக் காலை கொழும்பு சேரி கல்லூரி ஆசிரியரான வி. சரவணை என்பவரிடமிருந்து மருதனையில் சில காடையர் 200 ரூபாய் பெறுமான மோதிரத்தையும், ரூபா 5 ரொக்கத்தையும் வழிப்பறி செய்த சம்பவம் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுக் காலை கொழும்பு சேர்ந்த ரயிலிலிருந்து அவர் இறங்கி நடந்துசென்றபோது இச் சம்பவம் தொழில்நுட்பக் கல்லூரிக்கருகில் நடைபெற்றது.

## எதிரிகள் விடுதலை

மாவிட்டபுரம், செவ் மயிலிட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அருஷ்ணராசா, கணபதிப்பிள்ளை சிவசாமி, வல்விபுரம் கணபதிப்பிள்ளை ஆகிய மூவரும் வீரகத்தி சிவலிங்கம் என்பவரை பொல்லால் தாக்கி அவருக்குப் படுகாயம் விளைவித்ததாகவும், அவரின் தந்தையான வயிரவி வீரகத்தியை பொல்லால் தாக்கி சிறு காயம் விளைவித்ததாகவும் காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், விசாரணையின் பின்னர் மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச் அத்துறு எதிரிகளை விடுதலை செய்தார்.

## அமெரிக்க மிஷன் வெற்றி

வல்வெட்டித்துறை, செவ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கும் சிதம்பரா கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி 3-0 கோல்களால் வெற்றிபெற்றது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### புதன் 28-10-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 பாட்டு, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 நேயர்விருப்பம், 7-15 பேச்சு, 7-30 பாட்டு — வி கே. நடராசா, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பாட்டு, 10-15 தோந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 நாதஸ்வரம் — கே. கே. பரசுராம் பிள்ளை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 உயர்தரபள்ளிகளுக்கு, 2-40 ஜெய பேரிகை

மாலை 5-15 புல்லாங்குழல், 5-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 செய்திச் சுருக்கம், 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 செய்தி விளக்கம், 7-45 நாடகம் — 'முதல் வேலை', 8-00 திரைப்பட இசை, 8-30 இம்மாதப் பாடல், 8-35 பொன்னொளிர் பாரதம், 8-45 குரல் இசை, 9-15 தாளவாத்தியக்கச்சேரி, 9-45 இசைமாலை, 10-00 புல்லாங்குழல்.

## "தோட்டப் பாடசாலைகளில் விளையாட்டுப்போட்டி" அவசியம்

டண்டாரவளை, செவ் பண்டாரவளை கிரேக் தோட்டப் பாடசாலையின் ஐந்தாவது வருடாந்த விளையாட்டுப்போட்டி அண்மையில் திரு ஆர். டபிள்யூ. மேயோ தலைமையில் தோட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

திரு ஆர். டபிள்யூ மேயோ தமது தலைமையுரையில் மாணவர்களுக்கு உளவளர்ச்சியுடன் உடல் வளர்ச்சியும் அவசியம் தேவை. அதற்கு இத்தகைய போட்டிகள் ஒவ்வொரு தோட்டப் பாடசாலைகளிலும் நடைபெறவேண்டும் இன்று அனேக பாடசாலைகள் செயலற்றுக்கிடக்கும் இவ்வேளையில் இத்தோட்டப்பாடசாலையில் இவ்விழா நடைபெறுவது ஏனையோருக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கட்டும்" என்று குறிப்பிட்டார்.

விளையாட்டுப் போட்டிக்கு ஊவா மாகாண உதவி வித்தியாதிபதி திரு. பி. எம். சேனாநாயக்கா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். திருமதி மேயோ பரிசில்களை வழங்கினர்.

விளையாட்டுப் போட்டியில் 'பாண்டியன் இல்லம், சேரன் இல்லம், சோழன் இல்லம் முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெற்றன.






திருக்கேதீச்சர ஆலய வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ள தடைகளை ஆராய்வதற்கு

## இந்துக்களின் மாபெரும் கூட்டம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் சனிக்கிழமை 31-10-64 பி. ப 5 மணிக்கு திரு முத்துசாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் சபை நாவலர் மண்டபம், யாழ்ப்பாணத்தில்நடைபெறும் எல்லா இந்துக்களும், இந்து ஸ்தாபன பிரதிநிதிகளும் சமூகமளிப்பார்களாக.

963

---

வடகோவை

## கண்ணகை அம்பாள் கோவில் திருப்பணி வரவு-செலவு அறிக்கை

1957—1958 வரையும் உள்ள வரவு-செலவுத் திட்டம்

| | |
|---|---|
| வரவு ரூபாய் | — 2642-00 |
| செலவு " | — 5921-42 |
| கைப்பொறுப்பு | — 3279-42 |

1958—1963 வரையும் உள்ள வரவு செலவுத் திட்டம்

| | |
|---|---|
| கோப்பாய் வடக்கில் வரவு சேர்ந்தது | 4748—92 |
| கோப்பாய் தெற்கில் வரவு சேர்ந்தது | 562-00 |
| வாழைக்குலை விற்ற வரவு | 3841-00 |
| மொத்த வரவு | 9151-92 |
| மொத்த செலவு | 13018 85 |
| கைப்பொறுப்பு | 3861-93 |

சிவ ஸ்ரீ வை, மு பரமசாமிக் குருக்கள்
கோப்பாய் வடக்கு. 957

---

### தேவை

இரும்பு வேலையிலும் (Blacksmiths) மின்சார ஒட்டு வேலையிலும் (Welders) திறமையும் நவீன கிறில், கேற் வேலையில் அனுபவமுள்ளவர்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். ஹரன் எஞ்ஜினியரிங் வேக்ஸ், 33, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 1060

---

## பிரிவுபசாரம்

உடுப்பிட்டி செவ் கரவெட்டி தபாற்கந்தோரின் உப அதிபராகக் கடமையாற்றிக் கந்தளாய் தபாற்கந்தோரின் அதிபராகப் பதவியுயர்வுடன் இடமாற்றஞ்செய்யப்பட்ட திரு கே. கணபதிப்பிள்ளைக்கு இவ்வூர்ப் பொதுமக்கள் பிரிவுபசாரக் கூட்டம் நடத்தினர்.

## வரி விளம்பரம்

அனுபவம் வாய்ந்த சீவ நிபுணரால் இயற்கை அமைப்புக்கேற்ப பற்களைக் கட்டுவதற்கு உகந்த இடம் யாழ்ப்பாணத்தில் இது ஒன்றே. கண் பார்வை பரிசோதனை செய்யும் டாக்டரினால் சிபார்சு செய்த கண்ணாடிகள் அழகிய பிரேம்களில் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். எஸ். எம். பெர்னண்டோ, பிரதானவீதி, முதலாம் குறுக்குத் தெரு சந்தி, யாழ்ப்பாணம். 885

---

### புத்திரபாக்கியம்

பெண்களில் மலடு கிடையாது. புத்திரபாக்கியம் இல்லையே என்று கவலை இனி வேண்டாம். நூற்றுக்கணக்கானோர் என்னிடம் மருந்து சாப்பிட்டு பிள்ளையும் பெற்றிருக்கிறார்கள். பொ. செல்லையா, ஆயுர்வேத வைத்தியர், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 882

---

### 24 மணியும் சிவதொண்டு!

பொய்யின் அடிமையில்லாத மெய்த்தொண்டர்களும் - பத்தினித் தாய்மார்களும், மன்னர் முதலான அறத்தோர்களும், நல்ல காரியங்களையும் - உண்மைகளையும் நிரந்தரமாகப் பரிபாலித்து, சிவமணத்தை உலகெலாந் தியானமூலம் பரப்பி உலகை உய்ய வைத்தார்கள்!

இந்தத் தருமத்தின் - கற்பகால விரிவை, மாவட்டம் மாஜிஸ்திரேட், சனம் செ. தனபாலசிங்கம் அவர்களின் பூஜா வேதிகையில் ஐப்பசிமாசம் 1-ம் வெளியில், மங்கல தீபத்தின் முன்பு வாசித்து, அரங்கேற்றம் செய்தோம்!!

24 மணியும் சிவத்தின் தொண்டின் நாமென்று இவ் விரிவுநூல் கூறுப!!!

வ் த துவக்க லைஞன் ஆசி, சாந்தகுரு சன்மார்க்க தவ கூடம், கந்தரோடை. 1061

---

### தேவை

சித்த ஆயுர்வேத ஆஸ்பத்திரிக்கு தராதரப்பத்திரமுள்ள வைத்தியர்கள், ஓர் ஓடலி, தோட்ட வேலை செய்யக்கூடிய குடும்பஸ்தர் (இந்தியர் விரும்பத் தக்கது) தேவை. நேரில் விண்ணப்பிக்கவும்.

காரம்பன் பிரத்தியேக ஆஸ்பத்திரி, ஊர்காவற்றுறை. 1062

---

## பருத்தித்துறை நகரசபை கேள்விப்பத்திர அறிவித்தல்

பருத்தித்துறை நகரசபையின் 1965-ம் ஆண்டு கீழ்க்குறிப்பிடப்படும் குத்தகைகளுக்கும், மற்றும் தேவையான பொருட்கள் கொடுப்பதற்கும் 1964-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரையும் பருத்தித்துறை நகரசபைத் தலைவரால் முத்திரை சீல்செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 1964-ம் ஆண்டு நவம்பர்மாதம் 11-ம் திகதி 2-00 மணிவரை இக்காரியாலயத்தில் பிணைப் பணமும் கேள்விப்பத்திர நிர்ணய விலை கீழ்க்குறிப்பிட்டபடி செலுத்திப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். கேள்விப்பத்திரத்திற்காகச் செலுத்திய பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

கேள்விகள், தலைவர், நகரசபை, பருத்தித்துறை என விலாசமிடப்பட்டு தபால் உறையின் இடதுகை மேல்கோணத்தில் இன்னதற்கான கேள்விப்பத்திரம் என்று எழுதப்பட்டு பதிவுக்கடிதத்தின் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது சபையின் கேள்வி பெட்டியினுள் போடப்படல் வேண்டும். இவைகளைப்பற்றிய விபரங்கள் தெரியவிரும்பின் காரியாலய நேரங்களில் நகரசபைக் காரியாலயத்தில் தெரிந்துகொள்ளலாம்.

| | | | பிணைப்பணம் | கேள்விப்பத்திர நிர்ணய விலை |
|---|---|---|---|---|
| 1. | காய்கறிச்சந்தை குத்தகை | ரூபா | 250-00 | ரூபா 25-00 |
| 2 | மீன் சந்தை " | " | 150-00 | " 15-00 |
| 3 | மாட்டிறைச்சிக் கடை," | " | 25-00 | " 5-00 |
| 4. | வண்டில் வான்காலை " | " | 50-00 | " 5-00 |
| 5. | தெரு, சந்தைக் குப்பைகள் விற்றல் | | 25-00 | " 5-00 |
| 6. | நகரசபைக் காணிகளின் பிரயோசனத்தை விற்றல் | " | 25-00 | " 5-00 |
| 7. | மின்சாரப் பகுதிக்கு தேவையான சாமான்கள் | " | 250-00 | " 25-00 |
| 8. | கந்தோர் பாவிப்பிற்குரிய உபகரணங்கள் " | " | 50-00 | " 10-00 |
| 9. | சுகாதாரவேலைப்பகுதிகளுக்குத் தேவையான சாமான்கள் | " | 150-00 | " 15-00 |

தலைவர்,
நகரசபை, பருத்தித்துறை.

நகரசபைக் காரியாலயம்,
பருத்தித்துறை. 24-10-1964. 966



யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சரஸ்வதி விழாவின் போது நடித்த "அசுர சம்ஹாரம்" என்ற நாட்டிய நாடகத்திலிருந்து சில காட்சிகள். இரத்தினேஸ்வரி, அருந்ததி, கனகாம்பிகை, சுந்தரேஸ்வரி, நளாயினி, ஜானகி, மாலா, ஈஸ்வரி, கலா ஆகியோர் இந் நிகழ்ச்சியில் பங்குபற்றினர். இந் நாட்டிய நாடகத்தை தயாரித்து அளித்தவர் செல்வி. ஞானு. சிவசுப்பிரமணியம்.

## 'வழிகாட்டியாக விளங்கினர்'

### தம்பருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்

"திரு. தம்பர் மத்திய கல்லூரிக்கு அதிபராக மட்டுமிருந்து சேவை செய்யவில்லை. கடந்த பலகாலமாக பல மாணவர்களையும், ஆசிரியர்களையும் நல்லபாதையில் நோக்கிச் செல்லக்கூடிய வழிகாட்டியாகவும் இருந்தாரென்று" யாழ்ப்பாண மத்திய கல்லூரி புதிய அதிபர் திரு. எஸ். சபலிங்கம் பேசிய போது குறிப்பிட்டார்.

நேற்று யாழ். மத்திய கல்லூரியில் மத்திய கல்லூரி ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் ஏற்பாடு செய்யப்பட்ட முன்னாள் அதிபர் திரு. ஏ. ஈ. தம்பரின் பிரியாவிடைக் கூட்டமொன்றில் பேசியபோதுதான் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி மாணவர் சார்பில் செல்வன் கு. ராதாரமணன் பேசுகையில், அதிபர் திரு. தம்பர் கல்லூரிக்கு ஒரு ஆசானாகத் துலங்கினரென்றும் மாணவரின் கல்வியில் அதிக அக்கறை செலுத்தினர் என்றும் கூறினர்.

கூட்ட இறுதியில் திரு. தம்பர் அலங்கார மோட்டார் ரதத்தில் யாழ். வீதிகளில் பவனியாக அழைத்துச் செல்லப்பட்டார்.

## கார் திருட்டு முயற்சி வழக்கு

### விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

சென்ற ஜூலை மாதம் 3-ந் திகதி கார் ஒன்றை யாழ்ப்பாணத்தில் திருட முயற்சித்ததாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர்களான பி. ஏச் சின்னக்கோன், ஏ. எஸ். கிறிஸ்தோபர், வை. சிக்கலாஸ் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபதி திரு ரி. ஜெ. இராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு மேல் விசாரணை நவம்பர் மாதம் 24-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதே குற்றச்சாட்டின் பேரில் எஸ். ரி. குணரத்தினத்திற்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கும் 24-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த குற்றப்பகுதி இன்ஸ்பெக்டர் திரு. கனகசிங்கம், கோட் இன்ஸ்பெக்டர் திரு. ஐ. ஏ. ஆர். சகாயத்தின் உதவியுடன் இவ் வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

## என். எம். மின் விளக்கம்

கொழும்பு, செவ்வாய்

'நான் கூட்டரசாங்கத்தின் ஒரு பங்காளியாக இருப்பதால் அதில் நான் பொறுப்புக்களை ஏற்கவேண்டியுள்ளது. இதன் காரணத்தினால் ஒரு தொழிற்சங்கத்தின் தலைவராக நான் இருக்க ஏற்றவனல்ல' என நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா காஸ் தொழிலாளர் தொழிற்சங்கக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

தொழிலாளரின் 21 அம்சக் கோரிக்கைகள் பற்றி டாக்டர் பெரேராவிடம் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதில் அளிக்கையில் தொழிலாளருக்கு நன்மை தரக்கூடிய சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அவர் எடுத்துக் கூறினர்.

கிரிக்கெட் டெஸ்ட்

## ஆஸி: 352 பாகிஸ்தான்: 1-28

கராச்சி, அக். 28

ஆஸ்திரேலியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே இங்கு நடைபெறும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து 352 ஓட்டங்கள் எடுத்தது. பாகிஸ்தான் தனது முதல் இன்னிங்ஸில் 414 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பாகிஸ்தான் தனது இரண்டாவது இன்னிங்ஸில் நேற்று இடைவேளைவரை ஒரு விக்கட் நஷ்டத்துக்கு 28 ஓட்டங்கள் எடுத்தது. சிம்ஸன் 153 ஓட்டங்களும் பேட்ஜ் 54 ஓட்டங்களும் எடுத்தனர். நாளை 4-வது நாளாகும்.

## அரிசி இறக்குமதி விவகாரம்

கொழும்பு, செவ்.

பர்மாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்வது சாத்தியமாகாவிடில் இலங்கை வேறு நாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்யவேண்டிவருமென அறியப்படுகிறது.

பர்மாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்வது சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்துக்கும் பர்மா வர்த்தக தூதுகோஷ்டிக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எதுவித முடிவும் காணப்படாமையாலேயே இவ்வித நிலை எழுந்துள்ளது. நல்ல உடன்பாடு காணப்படாவிட்டால் இலங்கை வேறு நாடுகளிலிருந்துதான் அரிசி இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும்.

பர்மாவிலிருந்து இறக்குமதியாகும் அரிசி விலை சம்பந்தமாகவே இந்த நிலை தோன்றியுள்ளது.

## வங்கி அலுவல் சிங்களத்தில்?

கொழும்பு, செவ்

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் அலுவல்களை அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் திகதியிலிருந்து தனிச் சிங்களத்தில் நடத்த வேண்டுமென்று மொழிக் கமிஷனர் விடுத்திருந்த கோரிக்கைகுறித்து மொழி சம்பந்தமான மந்திரி சபை உபகமிட்டி இன்று ஆராய்ந்தது.

இந்த வங்கிகள் தனது அலுவல்களை தனிச் சிங்களத்தில் நடத்தவேண்டுமென்ற கட்டத்தை இலங்கை வங்கி நிர்வாகிகள் பலமாக ஆட்சேபித்துள்ளனர். இயந்திர சாதனங்கள் ஆங்கிலத்தில் இருப்பதாலும் மற்றும் சில முக்கியமான வேலைகள் ஆங்கிலத்திலேயே நடைபெறுவதாலும் அவற்றை சிங்களத்திற்கு மாற்றுவது கஷ்டம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது. இதுபற்றி பின்னர் ஆராய்வதென்று மந்திரிசபை உபகமிட்டி தெரிவித்துள்ளது.

## முட்டுக்கட்டை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்பொழுது இங்கு நடைபெற்றுவரும் பேச்சுக்கள் முடிவுறாத பட்சத்தில், இலங்கையிலும் தொடர்ந்து நடைபெறலாமென்றும், இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள இந்திய பிரதமரை ஸ்ரீமா அழைக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

### கொள்கையில் மாற்றம்?

7 லட்சம் இந்தியர்களை இந்தியா ஏற்கவேண்டுமென்ற இலங்கையின் கொள்கையில் மாற்றம் ஏற்படுத்த புதிய சமரச மார்க்கம் மூலம் தீர்வு காண முயற்சிகள் நடைபெறுகின்றன.

### காமராஜர் சிறிமா சந்திப்பு

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் என்ற கோதாவில், காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜர் இன்று பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்து சில நிமிட நேரம் பேச்சுக்கள் நடத்தினர்.

### பத்திரிகைகள் அபிப்பிராயம்

இலங்கை இந்தியர் பிரச்னை குறித்து இருநாட்டுப் பிரதமர்களுக்கு மிடையே நடைபெற்று வரும் பேச்சுக்கள் பற்றி இந்தியப் பத்திரிகைகள் ஓரளவு திருப்தியளிக்கக்கூடிய வகையில் செய்திகள் வெளியிட்டுள்ளன.

பேச்சு வார்த்தைகளில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டிருக்கிறதென்றும் பிரச்னை தீரக்கூடிய அறிகுறிகள் தோன்றியுள்ளன என்றும் 'ஹிந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

சமரச உடன்பாடு ஏற்படக்கூடிய அறிகுறிகள் காணப்படுவதாகவும் பிரச்னையைத் தீர்ப்பதில் நம்பிக்கை பிறந்திருப்பதாகவும் "இந்தியன் எக்ஸ் பிரஸ்" தெரிவித்துள்ளது.

பேச்சுக்கள் நாளையும் நடைபெறும்.

## "தேர்தலில் ஆசீர்வாதம் யாரை ஆதரித்தார் என்று தெரியாது"

### புலோப்பளை கொலை வழக்கில் சந்தியாபிலிப்பு சாட்சியம்

சாவகச்சேரி, புதன்

புலோப்பளை கிராமசபை தேர்தலில் கொலையுண்ட ஆசீர்வாதம், சேதுகாவலரையும், செல்வராசாவையும் ஆதரிக்கவில்லையென்றும், சேதுகாவலர் செல்வராசா கோஷ்டிக்கு மாறாக தேர்தலில் ஆசீர்வாதம் வேலை செய்தாரா என்று தனக்கு தெரியாதென்றும், செல்வராசாவிற்கு எதிரான கோஷ்டியில் ராஜசூரியர் இருந்தாரா என்று தனக்கு தெரியாதென்றும், 2-ம் எதிரி ராஜசூரியரை ஆதரித்தது பற்றி தனக்கு தெரியாதென்றும், புலோப்பளை கொலை வழக்கில் சாட்சியமளித்த குபலையர் கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார்.

புலோப்பளை கொலைவழக்கு நேற்று காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதியரசர் திரு. ஜெபர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பளை சந்தையில்கடை வைத்திருக்கும் வியாபாரியான கிருஷ்ணபிள்ளை சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் 64-ம் ஆண்டு செப்டம்பர் 12-ம் திகதி புலோப்பளையில் பி. எட்வர்ட், ஆர். எலியஸ், எஸ. சீமான்பிள்ளை, எஸ. சுபதேசு, பி. மனுவேற்பிள்ளை, எம். ஜேக்கப், ஜே. அல்பிரட் ஆகிய 7 பேர்மீது ஆசீர்வாதம் என்பவரை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. ஈ. பி. சத்துருகுலசிங்கம் திருவாளர்கள் என. நடராசா, வி. கனகசபை ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். வழக்காளி தரப்பில் பளை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ரொட்ரிக்கோ, வழக்கறிஞர் திரு. வே. வி. எஸ். சண்முகநாதனின் உதவியுடன் ஆஜரானர்.

வழக்கு விசாரணை பார்ப்பதற்காக நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தனர்:

கிருஷ்ணபிள்ளை தொடர்ந்து கூறியதாவது:-

சம்பவம் நடைபெற்ற தினம் நான் பளை சந்தையில் இருந்தேன் அன்று பின்னேரம் கொலையுண்ட ஆசீர்வாதத்தை சந்தித்தேன். என்னுடன் கதைத்தபின் அவர் திரும்பிச் சென்றார். அப்பொழுது 2-ம் எதிரி எலியாஸ், ஆசீர்வாதத்தைக் கூப்பிட்டு 'நீ எங்கள் காணிக்குள் இருந்து, இன்று இரவிற்குள் வெளிக்கிட்டுவிடவேணும், நீ வெளிக்கிடாவிட்டால் கஷ்டமேற்படும்" என்று சொன்னார். உடனே ஆசீர்வாதம் "என்னுடைய காணியில் நான் இருப்பதால் உன்னுடைய சொற்படி வெளிக்கிட முடியாது" என்று சொன்னார். 2-ம் எதிரியின் கையில் ஒரு சாராயப் போத்தல் இருந்தது. 2-ம் எதிரி போத்தலை உயர்த்தி 'உனக்காகத்தான் இதை எடுத்துவைத்திருக்கிறேன்" என்றார்.

நான் சைகைகாட்டி ஆசீர்வாதத்தைக் கூப்பிட்டு, "சந்தையில் சச்சரவு வேண்டாம், வீட்டிற்குப் போ" என்றேன். அன்றிரவு 7 மணிக்கு கடையைப் பூட்டிவிட்டு வீட்டிற்குப் போனேன். சேட்டைக் கழற்றி வாங்கின் மீது போட்டேன். அப்பொழுது ரேடியோவில் முஸ்லிம் நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. சின்னத்தம்பி வந்து "உங்களுடைய ஆசீர்வாதத்தை வெட்டிப் போட்டதாக ஜேக்கப்பும், மனுவேற்பிள்ளையும் வந்து சொன்னார்கள்" என்று என்னிடம் கூறினர். ஆசீர்வாதத்தின் மச்சானும் அப்போது வீட்டில் இருந்தார். அவரையும் கூட்டிக் கொண்டு பொலிஸ் நிலையத்திற்குப் போனேன்.

எதிரிகளின் வழக்கறிஞர் திரு. சத்துருகுலசிங்கம் குறுக்குவிசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:

இச்சம்பவம்பற்றிக் கேள்விப்பட்டதும் ஆசீர்வாதத்திற்கு என்ன நடந்ததென்று அறிய முயலவில்லை. தேவசகாயமென்பவருக்குச் சொன்னேன். அவர் இவ்வழக்கில் சாட்சியல்ல.

வழ: கிராமசபைத் தேர்தலில் உமக்குஅக்கறையுண்டா?- இல்லை.

வழ: கடந்த கிராமசபைத் தேர்தலில் கட்டுப்பணம் கட்டினீரா?-ஆம்.

வழ: எந்தவட்டாரத்துக்கு?- 2-ம் வட்டாரத்திற்கு.

மேல்விசாரணை நவம்பர் 9ந் தேதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28-ந் அச்சிட்டு திகதி வெளியிடப்பட்டது